**(சுருக்கம்)**

திருத்திய ஊதிய விகிதங்கள் – செவிலியர்களுக்கு திருத்திய ஊதியம், தொகுப்பூதியம் மற்றும் செவிலியப்படி அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி (ஊதியப்பிரிவு)த் துறை**

**அ.ஆ. நிலை எண் : 395** **நாள்: 14—10—2010.**
புரட்டாசி, 28.
திருவள்ளுவர் ஆண்டு, 2041.

**படிக்கவும் :**

1) அ.ஆ. நிலை எண்: 234, நிதி (ஊதியப்பிரிவு)த்துறை, நாள்: 01—06—2009.
2) தமிழ்நாடு அரசு செவிலியர்கள் சங்கத்தினரின் 16–9–2010 நாளிட்ட மனு.

– – – – –

**ஆணை :**

அலுவலர் குழு, 2009–ன் பரிந்துரைகளின்படி மருத்துவத்துறையின் கீழ் பணியாற்றும் செவிலியர்களுக்கு திருத்திய ஊதிய விகிதமாக ரூ.9300—34800 + 4200 தர ஊதியம் 1—1—2006 முதல் கருத்தியலாகவும் 1—1—2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் பார்வையில் கண்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. பின்னர் ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் பேரில் + 2 மற்றும் இரண்டாண்டு பட்டயப் படிப்பு முடித்த மருத்துவம் சார்ந்த நுழைவு நிலைப் பணியிடங்களின் (Para Medical Posts) ஊதிய விகிதம் ரூ.5200—20200 + 2800 தர ஊதியத்திலிருந்து ரூ.9300—34800 + 4200 தர ஊதியம் என திருத்தி 1—1—2006 முதல் கருத்தியலாகவும் 1—8—2010 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

**2)** தமிழ்நாடு செவிலியர் சங்கம் தங்களது மனுவில் செவிலியர் பிரிவின் நுழைவு நிலைப் பணியிடமான செவிலியர் (Staff Nurse) பணியிடத்தின் கல்வித் தகுதி + 2 மற்றும் மூன்றாண்டு செவிலியர் பட்டயப் படிப்பு என்றும் +2 மற்றும் இரண்டாண்டு பட்டயப் படிப்பு முடித்த மற்ற மருத்துவம் சார்ந்த பணியிடங்களுக்கு செவிலியர் பணியிடத்திற்கு இணையாக ஊதியம் திருத்தி அமைக்கப்பட்டதில் உள்ள முரண்பாடுகளைக் களைந்து தங்களது ஊதிய விகிதத்தை / தொகுப்பூதியத்தை திருத்தி அமைக்குமாறும் மற்றும் செவிலியப்படி வழங்கியும் ஆணைகள் வெளியிடுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

**3)** தமிழ்நாடு செவிலியர் சங்கத்தினரின் கோரிக்கைகளை அரசு ஆராய்ந்து அவர்களின் + 2 கல்வித் தகுதி மற்றும் மூன்றாண்டு கால செவிலியர் பட்டயப் படிப்பு, அவர்களின் பணிச்சுமை, அயராத உழைப்பு மற்றும் அப்பணியிடத்தின் உயர் பதவிகளின் நிலைகளைக் கருத்தில் கொண்டு அவர்களின் ஊதிய முரண்பாடுகளைக் களைந்து ஊதிய திருத்தங்கள்

/த.பி.பா./

மேற்கொள்ள வேண்டியது அவசியம் என தீர்மானித்து கீழ்கண்டவாறு ஊதிய திருத்தங்கள் செய்து அரசு ஆணையிடுகிறது:

| வரிசை எண் | பதவியின் பெயர் | தற்போதைய ஊதிய விகிதம் + தர ஊதியம் | திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம் |
|---|---|---|---|
| | | **ரூ.** | **ரூ.** |
| 1. | செவிலியர்கள் (Staff Nurse) | 9300—34800 + 4200 | 9300—34800 + **4450** |
| 2. | செவிலியர் கண்காணிப்பாளர் நிலை – 2 (Nursing Superintendent Grade—II) | 9300—34800 + 4600 | 9300—34800 + **4700** |
| 3. | செவிலியர் கண்காணிப்பாளர் நிலை – 3 (Nursing Superintendent Grade—III) (செவிலியர் கண்காணிப்பாளர் நிலை–2 பதவியுடன் இணைத்து) | 9300—34800 + 4400 | 9300—34800 + **4700** |
| 4. | செவிலியர் போதகர் நிலை–2 (Nursing Tutor Grade—II) | 9300—34800 + 4600 | 9300—34800 + **4700** |

**4)** மைய அரசின் மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களுக்கு செவிலியப்படி வழங்கப்படுவதைக் கருத்தில் கொண்டு மாநில மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களின் பணிச்சுமை மற்றும் நோயாளிகளுக்கு அவர்கள் ஆற்றும் சேவையை அங்கீகரிக்கும் வகையில் மருத்துவத் துறையில் பணிபுரியும் செவிலியர், செவிலியர் கண்காணிப்பாளர் நிலை–1, நிலை–2, நிலை–3 (தற்போது நிலை–2 பதவியுடன் இணைக்கப்பட்டது) மற்றும் பயிற்சிப் பிரிவில் பணியாற்றும் செவிலியர் போதகர் நிலை–1 மற்றும் நிலை–2 ஆகிய பதவிகளுக்கு செவிலியப்படியாக (Nursing Allowance) மாதம் ஒன்றுக்கு ரூ.500/– அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

**5)** தொகுப்பூதியத்தில் பணிபுரியும் செவிலியர்களுக்கு தற்பொழுது முறையே முதலாமாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாம் ஆண்டுகளில் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர தொகுப்பூதியமான ரூ.3,500/–, ரூ.4,000/– மற்றும் ரூ.5,000/–ஐ ரூ.500/– உயர்த்தி இனி மாதந்தோறும் ரூ.4,000/–, ரூ.4,500/– மற்றும் ரூ.5,500/– தொகுப்பூதியமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

**6)** மேற்கூறிய ஊதிய திருத்தம் 1--1--2006 முதல் கருத்தியலாகவும் பணப்பயன் 1--10--2010 முதல் பெறும் வகையிலும் செவிலியப்படி மற்றும் தொகுப்பூதிய உயர்வு 1--10--2010 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்.**
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

முதன்மைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை, சென்னை – 9.
இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்ககம், 162–ஈ.வி.ஆர். சாலை, கீழ்பாக்கம், சென்னை–10.
இயக்குநர், மருத்துவம் (ம) ஊரக சுகாதாரப் பணிகள் இயக்ககம், 259– அண்ணா சாலை, சென்னை–6.

இயக்குநர், பொது சுகாதாரம் (ம) நோய்தடுப்பு மருந்து இயக்ககம், 359– அண்ணா சாலை, சென்னை–6.
மாநில கணக்குத் துறைத் தலைவர், கணக்குகள் (ம) உரிமைத் தொகை, சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAG), சென்னை–9 / மதுரை.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு/ தெற்கு / கிழக்கு ) சென்னை – 1 /35/5.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.
ஆணையர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை–15.
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.

<u>நகல் பெறுவோர்:-</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–9.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை – 9.
மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத்துறை, சென்னை – 9.
நிதி(சுகாதாரம்– 1 மற்றும் 2 )த்துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

14/X/2010

பிரிவு அலுவலர்.